தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

சித்திரை 20, யுவ — திருவள்ளுவர் ஆண்டு 2026

1995, மே 3, புதன்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 10—00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

*"குடிபுறங் காத்தோம்பிக் குற்றம் கடிதல்
வடுவன்று வேந்தன் தொழில்."*

குடிமக்களுக்குப் பாதுகாப்பு அளித்தலும், வேண்டுவன கொடுத்து உதவுதலும், குற்றம் புரிபவர்களைத் தண்டித்தலும் அரசின் கடமைகளாகும். குற்றம் புரிபவர்களைத் தண்டித்தல் என்பது பழி பயப்பது ஆகாது.

1. வினாக்கள்-விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 521, திரு. கு. சிவசுப்பிரமணியன், மாண்புமிகு உணவு அமைச்சர்.*

521—

பேட்டோடை பகுதி குடும்ப அட்டைதாரர்களை அமுதம் அங்காடியில் சேர்த்தல்

*33154—**திரு. கு. சிவசுப்பிரமணியன்:**

மாண்புமிகு உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[1995 மே 3

குறிஞ்சிப்பாடி தொகுதியில் மீனவர்கள் வாழும் பேட்டோடை பகுதி குடும்ப அட்டைகளை பெரியகுப்பம் அல்லது அன்னப்பன்பேட்டை அமுதம் அங்காடியில் சேர்க்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. இராம வீரப்பன், உணவு அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

குறிஞ்சிப்பாடி தொகுதியில் மீனவர்கள் வாழும் பேட்டோடை பகுதிகளில் உள்ள 150 குடும்ப அட்டைகளை காயல்பட்டு கிராம கடை எண். 2-லிருந்து பிரித்து பெரியகுப்பம் நியாயவிலைக்கடையுடன் இணைத்து ஆணையிடப்பட்டுள்ளது.

திரு. கு. சிவசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி சென்ற ஆண்டு கேட்கப்பட்டு இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கும்போது உடனடியாக 150 அட்டைகள் காயல்பட்டு கடையிலிருந்து பிரித்து, கேட்டுக்கொண்ட கோரிக்கையை நிறைவேற்றியிருக்கிறோம் என்று அறிவித்தார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு பொறுப்பு ஏற்றுக் கொண்ட பிறகு மீனவர் சமுதாயத்திற்கு நல்லபல காரியங்களைச் செய்துகொண்டு வருகிறார்கள். அதுபோன்று நம்முடைய மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் அவர்களும் இந்த நல்ல காரியத்தைச் செய்து கொடுத்ததற்காக அவர்களுக்கு புரட்சித் தலைவியின் தொண்டன் என்ற முறையில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 522 டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

522—

தமிழகத்தில் மாவட்டங்கள் தோறும் எய்ட்ஸ் கண்காணிப்பு மையம் அமைத்தல்

*27203—**டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் மாவட்டங்கள் தோறும் எய்ட்ஸ் கண்காணிப்பு மையம் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS